அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 | விரோதி ௵—ஆனி ௴ 1949 ௵ மே—ஜூலை ௴ | இதழ் 3

முருகன் உதிப்பதற்காகத் தேவர்கள் மன்மதனை ஏவுதல்

"மதனுந்த கர்க்கு மகவேனப்
பத்மந்தனில் பிறந்த குமரேசா"—திருப்புகழ்

74

பொருளடக்கம்

1.	இரும்பும் கரும்பும்	திருப்புகழ்மணி	...	1
2.	திருவருட்பா	மொ. அ. துரை அரங்கசாமி	...	4
3.	ஆண்டவன் அருளை அடையும் வழி	N. S. இராமச்சந்திர ஐயர்	...	12
4.	அமிர்த வசனிக்கு இன்சொல்	ராமசாமி சாஸ்திரிகள்	...	15
5.	இருமான் புணர்ந்த திருமார்பன்	சே. த. இராமலிங்கம் பிள்ளை	...	17
6.	மயிலும், காளையம்	இளவழகனார்	...	20
7.	ஔவை பிராட்டியார்	ஸ்ரீ வத்ஸன்	...	27

14—20 பல வர்ணப் படம் ரூ 1-4-0. (தபால் செலவுடன் ரூ. 2-2-0. அனுப்பவும்.)

ஒவ்வொரு ஊரிலும் அடியார் திருக்கூட்டம் ஏற்பட்டு, ஆண்டவன் வழிபாட்டில் ஈடுபட முந்துங்கள்.

சந்தாதாரர்களாகச் சேர 12 மாதப் பிரதிகளுக்குச் சந்தா ரூ. 1—8—0 அனுப்பவும். ஏஜண்டுகளுக்கு 50 பிரதிகள் ரூ. 6—4—0 (அனுப்பவும்)

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

" எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே "

மலர் 1 } விரோதி வருஷ ஆனி மீ
1949 ஜுன்—ஜுலை மீ { இதழ் 3

இரும்பும் கரும்பும்

திருப்புகழ் மணி

இரும்பும் கரும்பும் தனித்தனியே ஒவ்வொரு இயல்பைக் குறிக்கின்றது. திணிந்த அழுத்தமான கடின வன்மையை இரும்புதன் குணமாகக்கொண்டது; லேசில் இளகாது. வளையாது; வளைந்து தானே வணங்கவேண்டும். வணக்கம் இல்லாத மனம் இரும்பு மனம். கருணை, தயை, ஜீவகாருண்யம் இவையெலாம் மன நெகிழ்ச்சியில் காணப்படும் குணங்கள். இந்தக்குணங்களை இரும்பு சுட்டிக்காட்டாது. காந்தத்தை கண்டால் ஒரே இழுப்பு இரும்புக்கு. அடியார்கள் மனம் காந்தத்தைக்கண்ட ஊசிபோல, ஆண்டவனிடம் அணுகி அணுகி நிற்குமாம். கந்தன் எனும் காந்தத்தால் இழுக்கப்பட்டபோது இரும்பால் செய்யப்பட்ட ஊசி மனம் தனக்கும் காந்தத்திற்கும் இருக்கும் உறவை மறவாது நிற்கும்.

பக்திநெறியில் ஈடுபட்ட அடியார்கள் மனம் இரும்பின் குணத்தில், காந்தத்தால் இழுக்கப்படும் இயல்பு ஒன்றை அடைந்துள்ளது. பக்தியின் இயல்பைச் சொல்லுங்கால் தாயுமானர் பாடுவதும் பாருங்கள். "ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல்

பயில்வாம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமானே
சிறுசதங்கைப் பொற்பத்ம மெனக்கென்று அருள்வாயே

போலவே ஓர் உறவும் உன்னி உன்னிச்'' செல்லுமாம் அன்பர் மனம். இதுமாத்திரமல்ல. ஒருவித வன்மையும் ஆற்றலும் அன்பருக்குண்டு. என்ன கஷ்டங்கள் வந்தாலும் எவரெவர் என்னென்ன நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கினாலும் ஆண்டவனிடத்தில் வைத்த பக்தி அசையாமல், தளராமல், வன்மையுடன் பற்றி நிற்பர். இது விஷயத்தில் இரும்பு முறிந்தாலும் முறியும். அன்பர் உள்ளத்தில் ஆண்டவனிடம் ஊன்றிய நம்பிக்கை கொஞ்சமேனும் தளராது. இந்த வன்மையில் இரும்பை வென்றேயிருக்கின்றார்கள் அன்பர்கள். தாயுமானவர் "இரும்பு நேர் நெஞ்சககள்வனேனும் உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ'' என்று பாடுகின்றார். பக்தி யென்னும் உஷ்ணத்தால் இரும்பாய்ச் சுயநலத்தையே நாடிநின்றமனம், அன்பாய், கருணையாய் கரைந்து விடுகின்றது. ஆயினும் அம்மனம் இரும்பின் வன்மையை ஆண்டவன் நம்பிக்கையிலும் உறவிலும் வைத்து திகழ்கின்றது. கரைந்து உருகிய உள்ளத்தில் ஓர் ரஸம் கலக்கின்றது. அது கரும்பின் ரஸமென்றே சொல்லவேண்டும். இந்தக் கரும்பு எங்கே காணப்படும் என்று வினவினால், பட்டினத்தார் சொல்லுகின்றார்.

"கண்டம் கரியதாம் கண் மூன்று உடையதாம்
அண்டம்போல் அழகியதாம்—தொண்டர்
உடல் உருகத் தித்திக்கும் ஓங்கு புகழ் ஒற்றி
கடல் அருகே நிற்கும் கரும்பு.''

என்று ஒற்றியூர் ஆண்டவனைச் சுட்டிக்காட்டினார். சிவரஸம் கரும்பின் ரஸம். அப்பர் ஸ்வாமிகள் பரமசிவன் வண்ணத்தை வகுக்குங்கால் பாடியதை நோக்கவும்.

"விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழி காரிகை வண்ணமும்
விரும்பு வார்தம் வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பும் வண்ணமும் ஆவர் ஐயாறரே.''

மயிலேறி யன்று நொடிபோதி லண்டம் வலமாகவந்த குமரேசா
தெளியமோ சூத்தையென்று அருள்வாயே

'அம்மையப்பன் அல்லவா ஈசன்! ஜகத்துக்கெல்லாம் அம்மையாய் விளங்கும் பார்வதிதேவியின் இன்மொழியில் வளர்வது ஒரு கரும்பு—சிவமெனும் கரும்பு. இந்தக் கரும்பின் ருசி நாவில் தித்தித்து விட்டால், மற்றக் கரும்பு, தேன் இவற்றின் ருசி கைத்து விடும் என்றார் அருணகிரியார். "குமரனை மெல்ல மெல்ல உள்ள அரும்பும் தனிப்பரமானந்தம் தித்தித்தது அறிந்த அன்றே; கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்து அறக்கைத்ததுவே" என்பது கந்தரலங்காரம். தேனூறு பாயுமடி திருவடிகண்டபேர்க்கு ஊனுருமில்லையடி ஒன்றையும் நாடாதே" என்பர் அகப்பேய்ச் சித்தர்.

பட்டினத்தடிகள் திருவுருவத்தை அனேக இடங்களில் பார்த்திருக்கின்றோம். ஓர் பெருந்துறவியாய் நிற்கின்றார். உலகுக்குக் குறியாய் இருக்கவேண்டியதைக் கையில் எடுத்து அளிக்கத்தயாராய் இருக்கும் நிலை. பேய்க் கரும்பைக்கொடுத்து ஏமாற்ற வேண்டாம். உம்முள் வளரும் சிவக்கரும்பைக் கொடுங்கள். மனதைக்கவரும் உருவம், நம்மை ஆட்கொளும் பாவம். உலகையே திருந்தச்செய்யும் சித்திரம். துறவி மார்க்கத்தில் இரும்பின் வன்மையும் உலகினுக்கு நெகிழ்ந்துருகும் அன்பும், கரும்பினும் இனித்துருகும் உள்ளமுமன்றோ எதிர் நிற்கின்றன. பட்டினத்தடிகள் பால் கலந்தாற்போல் இரும்பும் கரும்பும் மண முற்றால் உதவும் ஆற்றலும் நெகிழும் அன்பும் ஆண்டவன் நாமருசியும் உலகத்தை அளாவப் பெறலாம்-

இந்தவழி உலகேற்றத்திற்கு உத்தமமானவழி. உரிமைகளைச் சற்று மறந்து கடமைகளை நினைக்க ஏற்படும். கடமைகளை நினைத்த சமூகம் ஆனந்தத்தைப் பெருக்குகின்றது. உரிமைகளையே நினைத்த சமூகம் சண்டை சச்சரவுக்கு இரை ஆகின்றது. கடமைகளில் முதல் கடமை உலகுக்கு அன்பு கூறுதலேயாகும். இதை இரும்பின் வன்மையோடுபற்றி கரும்பாய்த்திகழும் தேசிய ஒற்றுமையில் திகழ்வோமாக.

அறிவை யறிவது பொருளென அருளிய பெருமானே
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே

திருவருட்பா

வித்வான் மொ. அ. துரை அரங்கசாமி, B. O. L., M. O. L.

'திருவருட்பா' என்பது ஓதுவார் உள்ளத்தை உருக்கும் ஒரு சிறந்த நூல். இது பாடல்களால் ஆன ஒரு நூல் என்றாலும், சிறிதளவே கல்வி கற்றவரும் படித்து விளங்கிக் கொள்ளுவதற்கு உரியது; இலக்கண இலக்கிய தருக்க நூல்கள் நன்கு கற்றுத் தேர்ந்தவரும், ஆராய்ந்து புதுப் புதுப் பொருள்கள் பெற்றுப் பயன் அடைதற்கு உரியது. எனவே, கற்றார், கல்லார் என்னும் இரு திறத்தாரும் பாராட்டுதற்கு உரிய ஒப்பு உயர்வு அற்ற நூல் திருவருட்பா ஆகும்.

திருவருளின் துணையால் பாடப்பெற்றது திருவருட்பா. திருவருட்பாவால் பாடப்பெற்றது திருவருள். திருவருட்பாவின் சிறப்பு முழுதையும் திருவருள் துணையுடையவரே உணர்த்த முடியும். திருவருட்பா என்னும் நூலினை அறியாதார் இக் காலத்தில் ஒருவருமே இல்லையென்னலாம். ஆனால், அந்த நூலை, முழுதும் ஓதினவர் ஒரு சிலர் கூட இருக்க மாட்டார்கள். அதில் ஒரு சில பாடல்களே பலரும் ஓதியிருக்கின்றனர். எனினும், ஒரு சில பாடல்களும் அவற்றை ஓதியிருப்பவருடைய உள்ளத்தை அள்ளிக்கொண்டு விட்டன. 'திருவருட்பா' என்று கேட்டவுடன் எவர் நாவிலும் தேனூறும்; கண்களில் இன்பக் கண்ணீர் பெருகும்; உள்ளம் நெகிழ்ந்து உருகும். என்னே இதன் ஆற்றல்! என்னே இதிலமைந்த கவர்ச்சி! ஒரு சில பாக்களுக்கே இவ்வளவு சிறப்பிருக்குமானால், நூல் முழுமைக்கும் எவ்வளவு சிறப்பிருக்கும்! அச் சிறப்பை எல்லையிட்டுக் கூறமுடியுமா? எழுதிக் காட்ட முடியுமா? ஆயுள் முழுமையும் இந்த ஒரு நூலையே திருப்பித் திருப்பி ஓதிக் கொண்டிருந்தால் போதும். நுனிப்புல் மேய்தலாகப் பல நூல்களைக் கற்பதை விட்டு, இந்த ஒரு நூலை மட்டும் ஓதிக் கொண்டே வந்தால் இலக்கியப் புலமை பெற்று

விடலாம்; இலக்கண நுண்ணறிவு அடைந்து திகழலாம்; திருவருளின் இயல்பினை அறிந்துமகிழ்ச்சியுறலாம்; திருவருளோடு இரண்டறக் கலந்து விடலாம்; திருவருள் வடிவமாகவே ஆகலாம்; மீண்டும் பிறந்து இறவாப் பேரின்பப் பெருவாழ்வு எய்தலாம். தமிழறிவுடையோர்க்கெல்லாம் வற்றாக் களஞ்சியமாவது, எடுக்க எடுக்கக் குறையாத புதையலாவது, இந்த நூல்.

கை கால் முதலிய உறுப்புகளையெல்லாம் பழுதறப் பெற்ற மகன் ஒருவன், அவற்றைக் கொண்டு உழைத்தால், தனக்கு வேண்டுவனவெல்லாம் பெற்று வாழலாம் என்று நினைக்கிறான். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' 'முயற்சி திருவினை ஆக்கும்!' முயற்சியினால் யாவும் பெறலாம். இந்த நூற்றாண்டு முயற்சியைத் தான் சிறந்ததாக வற்புறுத்துகின்றது. ஆனால், முயற்சியால் மட்டும் எல்லாம் அடைந்துவிட முடியுமா? முடியும் என்றுதான் பலரும் கூறுகின்றனர். செயலில் உற்று நோக்கினால், முயற்சியால் மட்டும் எண்ணுவன எல்லாவற்றையும் பெற்றுவிட முடியும் என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஹிட்லர் என்ற பெருமகன் முயற்சியில் சிறிதும் குறைந்தவன் அல்லன்; முஸோலினி என்பவன் முயற்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுவதே இல்லை. முற்காலத்தில் முயற்சியில் குறையாத எத்துணையோ பெருமக்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் முயற்சி எவ்வளவு தொலைவு பயன்பட்டது? முழுதும் பயன்பட்டதா? எண்ணிய எல்லாம் அடைதற்கு அம்முயற்சி துணையாயிற்றா? இடையில் முறிவு ஏற்பட்டது. மானம் இழந்து மதி கெட்டு அவர்களெல்லாம் மடிந்து மறைந்து போயினர். முயற்சியே, எண்ணுவன எல்லாம அளிப்பதில்லை. சோம்பிக் கிடப்பார்க்கு விழிப்புண்டாக்குவதற்கே, 'முயற்சி திருவினை ஆக்கும்; முயன்றால் முடியாததில்லை; உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!' என்ற தொடர்கள் கூறப்பட்டன. சோம்பலற்றவர்க்கு, இவை முழுதும் உண்மையான தொடர்கள் ஆகமாட்டா.

குறமகள் தனது தனமது பரிவொடு தழுவிய பெருமாளே
கருணையொ டருளிய மவுன வசனமு மிருபெருசரணமும்
மறவேனே

முயற்சிக்கும் மேற்பட்ட பொருள் ஒன்று உண்டு அதுவே முயற்சியையும் ஒருவனிடம் தோற்றுவிப்பது. அது தோற்றுவிக்கத் தோன்றிய முயற்சி, தன்னாலேயே ஆவது என்று ஒருவன் கொள்ள முற்படும்போது, அதைச் சிதைத்து, அஃது அவனைத் தெளிவிக்க முற்படும்; அதனாலும் அவன் தெளிவு பெறாதபோது அதை அடியோடு ஒழித்து, அவனையும் கலக்கி நிலைகுலையச் செய்யும். அத்தகைய ஆற்றலுடைய பொருளைத்தான் கடவுள் என்று பெரியோர்கள் பெயரிட்டு அழைத்தார்கள். கடவுவது கடவுள் மக்களுடைய உறுப்புக்களையும், உள்ளத்தையும், உணர்ச்சியையும் கடவுவதே - தூண்டிச் செலுத்துவதே - கடவுள். அதை இன்னதென்று அறிய முற்படும் ஒருவனுடைய உள்ளம் சொல் உறுப்புக்கள் எல்லாவற்றையும் கடந்து அது நிற்கின்றது. எனவே அவற்றைக் கடந்து நிற்கும் பொருள் கடவுள் என்று கூறவும் அஃது அமைகின்றது. கடவுவதும், கடந்து நிற்பதும் ஆகிய பொருளே கடவுள். அதனால்தான் முயற்சி தொழிற்படும். அதன் துணை இல்லையேல், வெறும் முயற்சியாலேயே ஒன்றையும் அடைந்துவிட முடியாது. அப்படியானால் முயற்சியே சிறிதும் இல்லையென்றால் எதைத்தான் அடைய முடியும்?

கடவுள் என்று சொன்னவுடன், "என்ன ஐயா இது! கடவுள் கடவுள் என்று கூறுகிறீர்கள்! கடவுள் எங்கே இருக்கிறது? இருந்தால் கண்ணுக்குத் தோன்ற வேண்டாமா? ஏதோ கடவுள் என்று கூறி உலகை ஏமாற்றுகின்றீர்கள்! உலகில் உள்ளவர்களைச் சோம்பேறிகள் ஆக்குகின்றீர்கள்! ஏனையா இந்தப் பிழைப்பு? கடவுள் இருந்தால் எதோ காட்டுங்கள்?" என்று சிலர் அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டுக்கொண்டு சீறி எழுகின்றனர்.

கடவுளைக் காட்டுவது மிக மிக எளிது. ஆற்றல் உள்ள இடத்தில் வெளிப்பட்டுத் தோன்றும் ஆற்றல் வடிவமே கடவுள் வடிவம். அழகு உள்ள இடத்தில்

இருக்கும் அழகு வடிவமே கடவுள். இவ்வாறே அன்பு, அருள், இளமை, எழில், ஏர் முதலிய வடிவங்களாகக் கடவுள் காட்சியளிப்பதை எல்லோரும் எவ்விடத்திலும் எப்போதும் கண்டு கொண்டேயிருந்தும். கடவுள் இல்லையென்று கூறுதல் முழு மடமையே ஆகும். "தெவுக் கொளற் பொருட்டே" என்று தொல்காப்பியர் கூறியிருக்கிறார் என்பர். 'தெவு' என்பது பிறழ்ந்த பாடம். தேவு என்பதே சரியான பாடம். 'தாவே வலியும் வருத்தமுமாகும். தேவுக் கொளற் பொருட்டே தெவ்வுப் பகையாகும்' என்று ஓதிப் பார்த்தால், தாவென் சொல்லிற்கு ஏற்பத் தேவென் சொல்லே மோனையின்பம் தரும் சரியான பாடமாகும் என்பது விளங்கும். இதை யறியாமல், இந்த ஒரு சூத்திரத்தை, 'தாவே வலியும் வருத்தமுமாகும்,' 'தேவுக் கொளற் பொருட்டே,' 'தெவ்வுப் பகையாகும்' என்று மூன்று சூத்திரமாகப் பிரித்து யாரோ வழங்கி விட்டனர். இது நிற்க.

'தேவுக் கொளற் பொருட்டே' என்ற உண்மையான பாடத்தை உற்று நோக்குவோம். 'தேவு' என்பது கொள்ளுதல் என்ற பொருளுடையது என்றனர் தொல்காப்பியர். எதை எதிலிருந்து கொள்ளுதல் வேண்டும்? பொருள்களிலிருந்து - கண்ணுக்குத் தோன்றும் விவகாரப் பொருள்களிலிருந்து - உள்ளத்தைக் கவரும், உணர்ச்சியைத் தம் வயமாக்கும் இளமை, அழகு, ஏர், எழில், அன்பு, அருள் முதலிய பொருள்களைக் கொள்ளுதல் வேண்டும் அவை, தாமாகவே தோன்றும் பொருள்கள் அல்ல பொருள்களிலிருந்துகொண்டு தோன்றுவனவாய், அவற்றை உற்று நோக்கும் காலத்தில் அவற்றையும் மறையச் செய்து தாமேயாகத் தோன்றும் பொருள்கள் அப் பொருள்கள். கல்லால் ஒரு நாய் வடிவம் அமைத்து வைக்கப்பட்டுள்ளது. கல், நாயன்று. கல்லிலிருந்து நாய் வடிவம் தோன்றுகின்றது. நாய் வடிவம் தோன்றுவதற்குக் கல்லே இடமாவது. ஆனால் நாய் வடிவத்தில் எண்ணத்தை ஆழ்த்தி, அந்த நாயின் உறுப்புக்களை உற்று

அருணை வளம்பதிக்கும் இறையோனே

மயிலினில் வந்து முத்தி தரவேணும்

நோக்குப்போது, கல் மறைந்தே போகின்றது. கல், காட்சியளிப்பதே இல்லை கல் அழிந்து போயிற்று! இல்லவேயில்லை' கல், இருந்தும் தோற்றுவதே இல்லை. அந்த ஆழ்ந்த எண்ணம் நீங்கியவுடனே காட்சிக்கு முன் நிற்பது கல்லே அப்போது நாய் வடிவம் இருந்தாலும் கூடக் கல் தானோ அது என்று ஒருவகையான அலட்சியமான எண்ணமே எழுகின்றது. இதைத்தான், 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்ற பழமொழி தெளிவிக்கிறது. கல்லிலிருந்து நாயைக் கொள்ளுவது போலவே, ஒவ்வொரு பொருளிலிருந்தும் அழகு முதலான பொருளைக் கொண்டு இன்பம் எய்துதல் வேண்டும் எனவே, உள்ளம் சொல் உறுப்புக்களைக் கடந்து நிற்கும் கடவுளை, அவற்றால் அறி பொருளாக்கும் வகையை உணர்த்தி, அதற்குத் தேவு என்ற பெயரைத் தமிழ்ப் பெரியோர்கள் வழங்கினார்கள். அறிபொருள்களுள் அறிவுடைய உயர்வாகிய உயர்திணைப் பொருள்களாகக் கொள்ளுகின்றபோது, ஆண்பாற் பொருளில் தேவன் என்றும், பெண்பாற் பொருளில் தேவி என்றும், பலர்பாற் பொருளில் தேவர் என்றும் அந்தத் தேவு என்ற சொல்லடியாகப் பிறந்த பொருள்களாக அவர்கள் வழங்கி யிருக்கின்றார்கள். தெய்வம் வடமொழி; தேவு தென் மொழி (இனிய தமிழ் மொழி). தெய்வம் என்ற சொல்லில் தேவு என்ற சொல்லில் உள்ள அவ்வளவு ஆழமான பொருள் இல்லை. தெய்வம் என்பது ஒளியுள்ள பொருள் என்ற அவ்வளவே! தேவு என்பது ஒளியுடன், அழகு அன்பு முதலிய எல்லாவற்றையும் உணர்த்துவது. ஆனால், அன்பு முதலிய இவையெல்லாம் தோன்றுவதற்கு அடிப்படையானது ஒளி ஆதலால் அதனை ஒளியென்ற பொருளில் தெய்வம் என்று வடமொழியாளர் வழங்கி, மற்றவற்றை யெல்லாம் உபலட்சணத்தால் பெற வைத்தார்கள் என்று கொண்டு அமையலாம். தேவு எனினும், தெய்வம் எனினும், கடவுள் தோன்றாத பொருள் என்று கூறுவதற்கு இல்லை, எனின், கடவுள் தோன்றாத பொருளா? காணாத

சிவமார் திருப்புகழை எநுநாவினிற்புகழ
சிவஞான சித்திதனை அருள்வாயே

பொருளா? இல்லாத பொருளா? தோன்றும் பொருள்! காணும் பொருள்! உள்ள பொருள்! எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்து உள்ளும் புறமும் அதுவேயாய் இலங்கும் பொருள் கடவுள்!

ஆனால், அதை அடைவது எப்படி என்பதுதான் நாம் அறிவதற்கு உரிய சிறந்த பொருளாகும்; நுட்பமான பொருளும் ஆகும். இதை உணர்த்தும் ஆற்றலுடையவர்கள் அக் கடவுளை உள்ளவாறு உணர்ந்து அதை அடைந்தவர்களே. அவர்களே அடியவர்கள் என்றும், ஆழ்வார்கள் என்றும் வழங்கப் பெறுபவர்கள். முன் முன் இருந்த ஆழ்வார்கள் அடியவர்களை விடப் பின்பின் வந்த ஆழ்வார்களும் அடியவர்களும் அதை உணர்த்தும் வகையில் சிறந்தவர்கள் ஏன்? முன்னவர்கள் உழைப்பின் பயன் முழுதையும் பின்னவர்கள் எளிதில் பெற்று விடுகிறார்கள். ஆதலால் அப் பயனாகிய முதற் பொருளால் அச் சிறப்பு இவர்களுக்கு ஏற்படுகின்றது. அவ் வகையில் திருவருட்பாவின் ஆசிரியர் பலப்பல ஆழ்வார்கள் அடியவர்களுக்குப் பின்னர்த் தோன்றி, அவர்கள் உழைப்பின் பயன் முழுதையும் பெற்றதனால் கல்லார் கற்றார் இரு திறத்தாரும் பயன் பெறும் முறையில் எளிய நடையில் இனிய பாக்கள் அருளியிருக்கிறார். ஆனது பற்றித் தான் திருவருட்பா நமக்குப் பெரும் புதையலாக இலங்குகின்றது.

கடவுளை அடையும் வழி யாது? மிகப் பழங் காலத்தவர்க்கு இந்த வழி மிக மிக அருமையாக இருந்தது. நான் மறைகள் கடவுளை அடையும் வழியை உணர்த்துவன என்பர். நான் மறையை உணர்ந்தவர்கள் கடவுளை அடையும் வழி மிக மிக அருமையானது என்றே கூறியிருக்கின்றனர். பின்னர் வந்த ஆழ்வார்களும் அடியவர்களும் கடவுளை அடையும் வழி எளிதானது என்றார்கள். நான் மறையைத் துணையாகக் கொண்டவர்கள், ஆழ்வார்களும் அடியவர்களும் அருளிய தமிழ் மறைகளை ஓதத் தலைப்பட்டனர். ஓதியபின் அவர்கள் அடைந்த வியப்

அசட அநாசாரனை அவலனை ஆபாசனை
அடியவரோடு ஆள்வதும் ஒருநாளே

பிற்கு அளவே கூற முடியாது. "தெரிய நான் மறையை ஓதித் திருவாய் மொழியில் தெளிகின்றோமே" என்று பெருங் களிப்போடு, நான்மறை ஓதியவர் கூற முன் வந்த னர். எனவே நான்மறையை நன்கு பொருளுணர்ந்து ஓதி யும் ஐயந் திரிபு அற உணர்முடியாத அப் பொருளைத் திருவாய் மொழியை ஓதி ஐயந்திரிபு அறத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம் என்பது தெளிவாகின்றது ஆழ் வார்களும் அடியவர்களும் அப் பொருளைத் தெளிவாக உணர்த்தி யிருப்பது தமிழர்களுடைய பெருந் தவம் என்ன லாம். அவ் வாழ்வார்கள் அடியவர்கள் எல்லாரையும்விட, மிக மிகத் தெளிவாக அதை உணர்த்தி யிருப்பவர் திருவருட்பா ஆசிரியர். எனவே, நமக்கு அக் கடவுளை அடை யும் வழி மிகமிக எளிய வழி. அவ் வழியை உணர்ந்த நாம் தற்காலத்தில் இன்னும் தெளிவாக உணர்த்தலாம்.

ஒரு பஞ்சு மரம் இருக்கிறது. காய்க்கும் பருவம் அடையும்போது அது மிக மிக உயர்ந்த மரமாகும். அதன் அடிமரம் கிளை முதலியவற்றில் சிறு முட்களும் இருக்கும். வளரவளர அடிமரத்தில் உள்ள முட்கள் தேய்ந்தும் போ கும். மெத்தை தலையணை முதலியவற்றிற்குப் பஞ்சு வேண்டப்படுவது. மரத்தின் கிளைகள் நாலாபக்கங்களி லும் விரிந்து மெல்லியனவாக நீண்டு வளர்ந்திருக்கும். மல ரும் பருவத்தில் செந்நிறப் பூக்களோடு விளக்கேற்றிவைத் திருப்பதுபோல மரம் காட்சியளிக்கும். பிறகு மரகதப் பருமணிகள் போலக் காய்கள் தொங்கும் காய்கள் முற்றின பிறகு அவற்றிலிருந்து பஞ்சுபெறலாம். பஞ்சு பெறவேண்டுமானால் என் செய்வது? கீழே நின்று, நுனி யில் கலையுகூடிய நீண்ட கொம்பால் (துரட்டுக்கோலால்) மரத்தில் உள்ள காய்கனிகளைப் பறித்துக்கொள்ளலாம். பஞ்சு மரமோ, கோல் எட்டமுடியாத உயரமுள்ளது. முற்றிய காய்களோ தாமாகவே கீழே விழமாட்டா. அது வரையில் காத்திருந்தால் கொட்டைகள் வெடிக்கப் பஞ்சு பறந்துபோய்விடும். எனவே, காய்களைப் பறித்துப் பய னடைய விரும்புவார் தம்முடைய மார்பிலும் காலிலும்

முறைமையாக நின் அடிகள் மேவவே
முனிவு தீரவந்து அருள்வாயே

துணியைக் சுற்றிக்கொண்டு மரத்தின்மீது கவைக்கோலுடன் தவழ்ந்தேறிக்கொண்டு, நடுமரத்திலிருந்து பிரியும் கிளைக் கவ்வுகளில் காலூன்றி, நடுமரத்தில் சாய்ந்து நின்ற வண்ணம், கவைக்கோலை நீட்டிக் காய்களைப் பறித்துக் கொள்வார்கள். வெறுங் கவைக் கோலாலும் காயைக் கீழிருந்தே பறித்துக்கொள்ள முடியாது. மரத்தின்மீது ஏறுவதும் சிறிது அருமைதான். ஏறிவிட்ட மாத்திரத்தாலும், தாமாகவே ஒருவர் பறித்துக் கொள்ளவும் முடியாது. ஏறவும்வேண்டும்; ஏறுவதற்குமுன் மார்பிலும் காலிலும் துணிசுற்றிக்கொள்ளவும் வேண்டும்; கையில் கவைக்கோலும் வேண்டும்; அதுகொண்டு பறித்தலும் வேண்டும். பஞ்சின் முற்றிய காய்களைப் பறிப்பது அருமையாகவே தோன்றும். பழகியவர்கட்கு அது மிகுந்த எளிமையான செயலே யாகும்.

பஞ்சுமரத்தின் காய்களிலிருந்து பஞ்சினை அடைவதற்கு உரிய வழிபோல்வதே கடவுளை அடைதற்குரிய வழியாகும். பஞ்சுமரம் போல்வதே கடவுள். மரத்தின் மீது ஏறுவதற்கு மரம் சார்பாவதுபோல, அவனை அடைவதற்கு அவன் அருள் சார்பாகவேண்டும். கவைக்கோல் போல்வது முயற்சி. எனவே கடவுளருளும் முயற்சியும் துணையாகக் கொண்டால் கடவுளை அடையமுடியும். வெறும் முயற்சியாலும் கடவுளை அடையமுடியாது. வெறும் அருளாலும் அவனிடமிருந்த முழுப்பயனும் பெற முடியாது. கொட்டை வெடிக்கப் பஞ்சு பறந்து செல்லுங்கால், ஒரு சிறிது யாருக்கோ கிடைக்கும். அதுபோலவே ஒரு சிலர்க்கு முயற்சியின்றியும் கடவுளருள் கிடைக்குமென்றாலும், முழுப்பயனும் அடைந்துவிட முடியாது. வேண்டுமென்றால், ஒரு சிறிது பஞ்சினைத் தற்செயலாகப் பெற்றவன் அதன் தன்மையை உணர்ந்து, அது வந்தவழியைத் தேடிச் சென்று, மரத்தை யடைந்து, அதில் ஏறித் தனக்கு வேண்டுமான அளவு பறித்துக் கொள்ளலாம். அதுபோலவே சிறிது அருளைத் தற்செயலாகப் பெற்றவர்கள் பிறகு முயன்று மேலும் கடவுளருளைப் பெற்றுப் பின்

நாடியது வேகத்தியெ ஞசுழலு — மோடனயின்

ஞானசிவமான பதம் — அருள்வாயே

வேண்டும் பயன் முழுதும் பெறலாம். எனவே மிருதியாகக் கட வுளருளும், அதனுடன் தன் முழு முயற்சியும் ஒருவன் பெறுதல்தான் கடவுளை அடையமுடியும். இதனைப் பலப் பல வகையாக உணர்த்துவதே திருவருட்பா என்னும் தேனினு மினிய நூலாகும்.

(தொடரும்)

ஆண்டவன் அருளை அடையும் வழி

(என். எஸ். இராமச்சந்திர ஐயர்—ஸ்கந்த நிகேதனம்)
ஆனைமலை ரோட்.

மக்களிடைத் துன்பத்தை விரும்புவோர் ஒருவரும் இலர். அனைவரும் இன்பத்தையே அவாவுகின்றனர். மாந்தர்தம் கண்கள் அழகார்ந்த பொருள்களைக் காண்பதில் மகிழ்ச்சியுறுகின்றன. செவிகள் இன்னிசையையும், நா இன்சுவையையும், மூக்கு நறுமணத்தையும், மெய் பரிச சுகத்தையும் அடைய விழைகின்றன. மனம் இவ்வைந்தின் வாயிலாக ஆனந்தமுற ஆசைப்படுகிறது. இவ்விதம் மானுடர் தங்கள் ஐம்புலன்களாலும் மனதினாலும் இன்ப நுகர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர்,

இவ்வுலகில் உள்ள மன்பதையில் தனந்தரை சிலரின் நாட்டம் தன்னலம் சிலரின் நாட்டம்; கனம் பெயர் சிலரின் நாட்டம், கலைவலி சிலரின் நாட்டம்; மனைசுதர் சிலரின் நாட்டம், மதுசுவை சிலரின் நாட்டம். ஏன்? இன்பமெய்த ஏற்ற எளிய மார்க்கம் இவைகளே என்று

பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை என்றெற் கருள்வாயே

எண்ணுகிறார்கள். ஆனால் சிலவற்றால் ஏற்படும் சுகம் நிலையானதா ? அல்ல. செல்வம் சகடக்கால்போல வரும். ஸ்தானமானுதிகள் இன்றிருந்து நாளை இல்லாமற் போகும். இவைகளால் விளையும் சுகம் அற்ப சுகமே. அதனை அநித்தியமென ஆன்றோர் அறைகுவர்.

பகுத்தறிவுபடைத்த மாந்தர் எதனையடைந்தால் நீடிய சுகத்தை எய்தல் இயலுமோ அதனைப் பெறு தற்கே முயற்சிப்பர். நாம் ஒரு கையில் அழகிய இரண்டு ஆடைகளையும் மற்றொன்றில் ஆயிரம் ரூபாய்களையும் வைத்துக்கொண்டு ஒருவனை அழைத்து, 'உனக்கு இவை களில் வேண்டுவது யாது. கூறுவாய் தருகின்றோம்' என உரைப்பின் அவன் உடனே தனக்கு ரூபாய் கிடைத்தால் போதுமென்பான். ஏனென்றால் ஆயிரம் ரூபாய் மூலம் அநேக வஸ்திரங்களை வாங்கி நீண்டகாலம் உபயோகித்து வரலாம்.

இதனால், அநுபவித்துவரும் இன்பமானது நீடித் திருக்கவேண்டும் என்னும் அவா மனிதர்க்கு இயற்கையி லேயே அமைந்துள்ளது என்பது புலப்படுகின்றது. ஆனால் எவ்வின்பம் நிலையானது அதனைப் பெறுவது எவ்வாறு என்பதைப்பற்றி யெல்லாம் நாம் சிறிதும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஆகையினாற்றான் பல இன்னல்கட்கும் வாழ்க்கையில் ஆளாகின்றோம். செல்வம் குன்றிய காலத் தும், நோய்வாய்ப்பட் டிருக்கையிலும், மணமக்களை இழக்க நேருகையிலும், நினைத்தபடி நம் விருப்பங்கள் நிறைவேறாது போகும்போதும் ஆறாத்துயரினில் ஆழ்ந்து உழலுகின்றோம். வாழ்க்கையின் நோக்கத்தைச் செவ்வனே உணராதிருப்பதுதான் இம் மயக்கத்திற்கு மூலகாரணம்'

கவலையை ஒழித்துச் சுகவாழ்வு வாழ்வதற்கு நம் நாட்டுப் பெரியோர்கள் கண்டுள்ள வழி ஆண்டவனை அறிந்து அன்புடன் வழிபடுதலேயாம். இதயத்துள் அவனை இடையறா திருத்திவைத்தல் இன்னல்களையெல் லாம் ஒழித்துவிடும். நிலையான சுகத்தை அருளும்.

விடுசெங்கையற்று உணர்ந்து வலம்வந்து உனைப்புகழ்ந்து
மிகவிஞ்சு பொற்பதங்கள் தருவாயே

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என முதற்பாவலர் பொழிந்துள்ள அமுதமொழியின் கருத்தை ஊன்றி உணர்தல் வேண்டும். உயிர்களின் மனம் மொழி மெய் ஆகியவற்றிற்கு எட்டாமல் அவற்றைக் கடந்து நிற்பவனும், தனக்கு ஒப்புயர்வு இல்லாதவனும் ஆகிய கடவுளது பாதத்தைச் சிந்தையில் வைத்திருப்பவர்க்கன்றி மற்றெவர்க்கும் மனக்கவலைகளை நீக்குதல் அரிது. ஞாலமீது சுகமடைந்து வாழச் சிறந்த வழி ஞால நாயகனின் அருளை நாடுதலேயாகும். ஈசனிடம் சரணடைதலே இன்பமெய்த இலகுவான வழி.

கீதையில் கண்ணன் கூறுவதையும் கவனிப்போம்.

"ஹே அர்ச்சுனா ஈச்வரன் யந்திரத்திலேறிய எல்லா பூதங்களையும் மாயையினால் சுழற்றிக்கொண்டு எல்லா உயிர்களுடைய இதயத்தின் கண்ணும் இருக்கிறான். அவனையே எல்லா வகையினாலும் சரணமாக அடை. மேலான சாந்தியையும் நித்யமான ஸ்தானத்தையும் அவனருளால் அடைவாய்."

ஆன்றோர்களின் அறவுரைகளைக் கடைப்பிடித்தொழுகிய அன்பர்கள் அனைவரும் ஈசனருளையே பற்பல வழிகளில் நாடி விடுதலை அடைந்துள்ளார், நம்மனோர் உய்யும் பொருட்டு நன்னெறிகளையும் கரவாது நவின்றுள்ளனர். அந்நெறிகளுள் செய்தற் கெளியதும் ஈசனருளை விரைவினில் அடைவிப்பதும் ஆகிய நெறியொன்றை குகாநுபூதிச் செல்வராகிய ஸ்ரீ அருணகிரிநாதர் தமது கந்தரநுபூதி யென்னும் உயரிய நூலில் முதற் செய்யுளிலேயே எடுத்தோதி யிருக்கின்றனர்.

" ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே.

வேதகீத போத மோன மெய்ஞ்ஞான நந்த
முற்றிடின்ப முத்தி யொன்று

தந்திடாயோ

பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்றதனால், ஈசனருளைப் பெறத் திருப்புகழ் பாடும் பணியே தலை சிறந்த எளிய சாதனம் என்று உபதேசிக்கிறார். ஆ! எவ்வளவு சுலபமான வழி! பணம் தேவையில்லை, புலமை வேண்டியதில்லை. அன்பு ஒன்றே வேண்டும். அவன் நாமங்களை உருகி ஓதுவார்க்கு அவனருள் கிடைப்பது திண்ணம். சுபம் - சுபம் . சுபம்.

'அமிர்தவசனி'க்கு இன்சொல்

(அம்பாசமுத்திரம் ராமஸ்வாமி சாஸ்திரிகள்)

அன்பர்களே! நாம் இப்புத்தாண்டில் இந்த "அமிர்தவசனி" என்ற தொடர் இதழை அன்புடன் வரவேற்கிறோம. இதனை நம்பெரும்பேறாக மதிப்போமாக. பல பத்திரிகைகள் சொல்லாலும் பொருளாலும், தலைப்பாலும் நம்மனதைச் சீர்குலைக்கும் இத்தருணத்தில் இந்த இன்சொல்லுடைய இதழ் நம்மையும் நாட்டையும் நாகரிகத்தையும் முன்னிலும் சிறப்புறச் செய்யும். இந்த இருபதாம் நூற்றாண்டில் நம்நாடு எவ்வளவு அமைதியின்மையைப பெற்றிருந்தாலும் அவ்வத்தனைக குறைகளையும், நம் அரும்பெரும் தலைவர்களின் இன்சொல், நம்மை அமைதிப் படுத்தி, ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது. இது கண்கூடான அனுபவம்.

இம்முறையிலேயேதான் முன்னோர்களும் சென்றனர். அதற்கு நம் நாகரிக நூல்களே சான்று. நம் நாட்டினியல்பே இனிமைதான். எந்தச் சூழ் நிலையையும் இன்சொல் திருத்தியமைக்கும். உலகு கொள்ளாப்புகழ் தாங்கிய 'பொதுமறை'. நூலில் வள்ளுவர் பெருமான் 'இன்சொல்'லை, தனி அதிகாரத்தில் வைததுப் பததுக்குறளால் சிறப்பித்திருக்கிறார். இன்சொல்லே மனிதனுக்கு அழகும் ஆபரணமுமாகும். அதே அறமுமாகும்' தானமுமாகும்.

"அகன மர்ந்தீதலி னன்றே, முகனமர்ந்
தின்சொலனாகப் பெறின்"

அருவரு வொழிய வடிவுள பொருளை
அலம்வர அடியேற் கருள்வாயே

அனைத்துயிருள்ளும் ஒளித்த கள்வனை கடவுளைக்காண உபாயமும் அதுவே. "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" என்று திருமூலர் மோக்ஷத்திற்கு உபாயங்கள் கூறுமிடத்து இன் சொல்லைச் சிறப்பித்தார். தாயுமான சுவாமிகளும், ஞானசம்பந்தர் போன்ற பெரியோர்கள் இனிமை சொற்களால் இறைவனடி சேர்ந்தார்கள் என்று கூறுகிறார்.

"கனிமதுரச் சொல்லால் துதித்தும்,
தொண்டர்குழாம் சென்றனர்" என்றார்.

அருணகிரிநாத ஸ்வாமிகளோ ஆண்டவனியல்பே அதுதான் என்கிறார். "இன்சொல் விசாக!" (அம்மையை வள்ளிநாயகியைக் கூறுமிடத்து) "தேனென்று பாகென்று உவமிக்கொணுமொழித் தெய்வ வள்ளி" என்கிறார். மேலே கூறினவாறால் 'இன்சொல்" தான் இனிமை, தேவை என்று தெரிகிறது. மேலும்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"
"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு,
அணியல்ல மற்றுப்பிற"

என்றெல்லாம் குறிப்பிடுகிறார். இந்த "அமிர்தவசனி"யோ மேலே கூறியவாறு நம் முன்னோர்களின் இயல்பைப் பெற்று நம் நாகரீகத்தை நிலைநாட்டிச் சிறப்புறவைக்கத் துணிந்திருக்கிறது. அதற்குமேல் அடியார்களும், சிறப்பாக திருப்புகழ்மணி போன்ற அன்புக் களஞ்சியங்களும் துணை நிற்கிறார்கள்.

ஆகவே பழவடியார் உட்கருத்தை யறிந்து இனிய மொழியால் நமக்கு இம்மை மறுமைப் பயன்களைத் தரும் நிலையில் திருப்புகழ், தேவார திருவாசகம் முதலிய அருள்நூல்களுக்கு நிகராக நமக்கு இன்பத்தை யூட்டும் இந்த அமிர்தவசனி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எதிர்பார்க்கப் படுவது இன்சொல்லேதான். அது அன்பின் திறனால்தான் கொள்ளக் கிடைக்கும். இந்த 'அமிர்தவசனியோ' நம் அன்பு நூல்களான திருப்புகழ் முதலிய அருள்வாக்குகளிலும் அடியாரிடத்திலும் ஆண்டவன் பாலும் அன்பு காரணமாகவே வெளிவந்திருக்கிற காரணத்தால் நாம் இதைப்படித்து எல்லாச் சிறும் சிறப்பும் பெறுவோமாக.

நீபமலர் பத்தி மெத்த வேணுமவர்சித்த மெத்த
நீலமயில் தத்தவிட்டு வரவேணும்

‘இருமான் புணர்ந்த திருமார்பன்’

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.,)

மிருக வகைகளில் மான் ஒரு அழகிய மிருகம். அதன் விசாலமான இரு விழிகள் அதனது கோழைத்தனத்தை வெளியிடும். சாதாரணமான நிகழ்ச்சிகளைக் கண்டும் மருளும் தன்மை அதன் பார்வையில் புலனாகும் இதனால் தான் மருண்ட நோக்கு ஏற்படும்போது பெண்களையும் ‘மானினேர் விழி’ மாதர் என்பர்.

இதன் உடலெங்கும் உள்ள புள்ளிகள் இதன் அழகை மிகுதிப்படுத்தும். இதன் நீண்ட கொம்புகள் அழகுடன் மருந்துக்கும் பயன்படும் மாண்புடையன. இதன் துள்ள லும் புலவர் உவமைக்குத் தப்புவதில்லை. இந்த அழகில் ஈடுபட்ட அருணகிரியார் ‘ துள்ளி விளையாடும் புள்ளி யுழை’ என்றார்.

மான் தனது உடலாதியனவற்றையும் பிறர்க்குப் பயன் படுமாறு உதவத் தக்கது. மானின் கொம்புகளும் தலைகளும் பெரிய தனவந்தரது மாளிகைகளின் அழகுப் பொருளாய் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மான் கொம்பு பஸ்பம் (ஒரு வகையான பொடி மருந்து) மார்பு வலிக்குப் பயன் படுகிறது. மானின் தோல் பூசை செய் வார்க்கு ஆசனமாக அமையும். மான் தோலை மார்பில் ஒளி ரும் பூணூலில் தவசிகளும் பிரம்மசாரிகளும் அணிவர் என பது திருமுருகாற்றுப் படையில்

“மானின் உரிவை தைஇய ஊன் கெடுமார்பின் என் பெழுந்தியங்கும் யாக்கையர்” என்பதாற் காண்க. மான் வயிற்றில் அரிதாரம் கிடைக்கும் “மான் வயிற்றில் ஒள் அரிதாரம் பிறக்கும்” என்றார் பிறரும். மிருக மதம் அல்லது மான் மதம் என்ற கஸ்தூரி சிறந்த வாச னைப் பொருள் கலவைக்குரியதாயுள்ளது. கோரோசனை சிவபிரான் பூசைக்குத் தந்து வந்த செய்தி திருநாளைப் போவார் புராணம் கூறுகிறது.

இறை யோனிடமாய் விளையாடுகவே
வியல் வேலுடன் மா
அருள் வாரிய

கவரிமான் தன் வாலின் மயிர் இறைவற்குரிய சாமரங்களுக்கு உதவியாகும். இது மானமுள்ள மிருகம் என்ற தன்மையில் 'மானமா' எனவும் போற்றப்படுகிறது. மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் என்பர் திருவள்ளுவர்.

மான், புராண இயக்கத்திற்கும் ஆற்றிய தொண்டிற்கு அளவில்லை. தாருகா வனத்து இருடியரது மனைவியர் தருக்கினை ஒழித்த சிவனார்மீது சினந்து அவரைக் கொல்லுமாறு தாருகா வனத்தவர் பல பொருள்களை அனுப்பினர். பகைத்து வந்த புலியையும், யானையையும் உரித்துத்தோலைஉடுத்திக்கொள்ளவும்அவர்கள்பாம்புகளை ஏவினர் அவை சங்கராபரணமாயின அவரைத்தன மாயா சாலத்தால் மயக்கச் செய்ய எண்ணி ஓர் மான் அனுப்பப் பட்டது. அம்மானை, உயிர் இரக்கமே உருவெனத்திரண்ட உமாமகேசர் தமது திருக்கரத்து ஏந்திக் களித்தனர். இதனை மானின் துடிப்படக்கி (மனத்தின் துடிப்படக்கும் வன்மையைக் குறிப்பாலுணர்த்தி)நின்ற மாதேவன் மலரடியிற் சென்று வீற்றிருக்கும் ஆர்வத்தை வெளியிடும் அப்பமூர்த்திகள்

"சிறுமானேந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்று இறுமாந்திருப்பன் கொலோ" என்றனர் (மாயமாரிய மான் பிடிக்கச் சொன்ன மயில் (சீதை) விளைத்த கதை இராமாயணமெனும் திப்பிய காப்பியமாயிற்று.

நச்சுப் பொய்கைக்குப் பாண்டவரை அழைத்துச் செல்வதற்கும் 'மான்' காரணமாயிருந்த செய்தி மாபாரதம் கூறியது.

மானின் இவ்வித சிறப்பால் சிவபிரான் இருமான்தலைவர் எனப்பட்டார் 'ஒருமானைக் கரத்தினில் வைத்து ஒரு மானைச் (கங்கை) சிரத்தினில் வைத்தார் எனஞர் ஒருவர்.

சிவனாரையும் 'மான்' விருதிபோட்டு 'அத்திமான் கலைமான் ஜுக்தருகிடல் மான் அயில் விழிக்கு அஞ்சனமளித்த புத்தி மான் என்றே கடுவடையாளம் பொறித்த கந்தர

கனக மயமறிந்த கள்ந்து தவளுமெனச்சற்றறிந்து
கவலை மொழித்தற்கிரகசி யருள்வாயே

முடைப் பெம்மான்' (சீகாழித்தல புராணம்) எனக் கூறு வது காண்க. அத்திமான் - அலைமகளான இலக்குமி - கலை மான் - சரஸ்வதி; ஐந்தரு நிழல் மான் - இந்திராணி - இவர்கள் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டி சுமங்கலிகளாக வாழவேண்டுமென்று எண்ணி புத்திமான் (ஆலகால) விஷத்தின் கரிய அடையாளந்தாங்கிய கழுத்துடைய பெம்மானுகும் என்பதாம்.)

முருகபிரானுர் மான் தேடிச் சென்றே மான்மகளை மணந்த வரலாறு உலகம் அறிந்தது. ஆனால் அருணகிரி யார் தெய்வயானை தேவியாரையும் மான் என்றே சொல்ல ஆசைப்படுகிறார். வள்ளியம்மை தினைப்புனத்து மான் என்றால் தேவயானை கற்பகவனத்து மான் ஆகும். மண்ணுட்டுப் புனம் தினை விளைத்ததால் தினைப்புனமாயிற்று. விண்ணுட்டு வனம் பொன் விளைத்ததால் பொன்வனமாயிற்று. ஆகவே வள்ளியார் 'தினைவன மான்' எனவும் தேவகுஞ்சரி யார் 'கனவனமான்' (பொன்வன மான்') எனவும் கூறப்பட்டார்.

ஆதலின் இருமான் புணர்ந்த திருமார்பர்
செவவேட் பரமன் ஆவர்.
" தினைவன மானும் கனவன மானும்
செறிவுடன் மேவும் திருமார்பா "

(தணிகைத் திருப்புகழ்)

பாவலர் சாரங்க நாவலர் சங்கசைந்த
பாடல் மிக்க செஞ்சொல் தரவேணும்

மயிலும் காளையும்

(இளவழகனார்)

தமிழ்நாட்டில், சோழ வளநாடு, பொருள் வளத்திற்கும் அருள் வளத்திற்கும் ஒருங்கே பெற்றது. காவிரியின் இருகரை யெங்கும் பூவிரிந்த பைம்பொழில்களும் தேவிருந்த திருக்கோவில்களும் நாளுங் காட்சி யளிக்கும். பொருளோடு அருள் கூடும்போதும் அருளோடு பொருள் இணங்கும்போதும் உண்டாகும் ஒரு தனியழகு, சோழநாடு முழுதும் காணப்படும். பொருளும் அருளும் ஒருங்கே பெறுதார், எங்கோ அரியராய்ச் சிலரே இருப்பர்.

சோழநாட்டிற் கடற்கரைப் பட்டினங்கள் பல உண்டு. 'காரைக்கால்' 'நாகபட்டினம்' முதலியன அவற்றிற் சில. உள்நாட்டின் வளங்களை வெளி நாடுகளுக்கு அனுப்பவும், வெளிநாட்டின் நலங்களை உள் நாடுகள் கொணரவும், அவை வாயிலாகத் திகழ்வன. நாகரிக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன. கடல் வாணிகம் புரியும் பெருவணிகர் குடி துவன்றி அவை சீர் சிறக்கும்.

'வாணிகம்' என்பது வண்மைப் பண்பு மிக்கது. ஓரிடத்தில் விளையும் பொருள்களை, விளையாத ஏனை இடங்களுக்குக் கொண்டுபோய் அங்கே உள்ள மக்களுக்கு அளவான விலையிற் பயன்படுத்துதல், உலக வாழ்க்கைக்கு ஒரு பெரிய உதவியாகும். அது சிறந்த வண்மையுள்ளம் படைத்தோர்க்கே நன்றாகக் கைகூடும். மானமும் கடமையும் உண்மையும் உடையோர்க்கே வாணிகம் சிறந்துவரும். 'காரைக்கால்'

என்னும் சோழநாட்டுக் கடற்கரைப் பட்டினம் இத்தகைய வண்மை வாணிகத்தால் புகழ்பெற்றது.

"மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி"

என்று அது தொண்டர்சீர் பரவுவாரால் பாராட்டப் பெற்றது.

பிறந்து :—

அங்குத் தனதத்தனார் என்னும் வணிகர் குலத் தலைவர் புகழ் பொருள்களோடு விளங்கியிருந்தார். அவருக்குத் திருமகளே உருவெடுத்ததுபோல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. வளத்திற்குத் தக்கபடி அது பேரழகும் புனிதத் தன்மையும் உடையதாய் விளங்கிற்று. குண நலத்திலேயே கருத்துடைய தனதத்தனார், செழுமையும் அழகும புனிதமும் ஒருங்குடைய அந்தக் குழந்தைக்கு, அதன் புனிதப் பண்பையே மிகப் பாராட்டி விரும்பிப் 'புனிதவதியார்' என்று பெயரிட்டார்.

அந்தக் குழந்தை, மற்றக் குழந்தைகளைப்போல உலகத்தில் பிறந்தபின் படிப்படியாக முன்னேறிப் புனிதம் பெறவேண்டும் என்பதில்லை. அது பிறக்கும் போதே புனிதவதியாக இருந்தது. அதன் பொங்கிய பேரழகு இந்தக் குணநலத்தால் பின்னும் மிகுந்தது. புனிதத்தால் அப்படி பேரழகு மிக, அவர் பிறந்தார்.

காப்பிய நலத்திலும், ஊடுருவிச் சென்று உண்மையைத் துருவிக் கொணர்ந்து மெய்யுணர்வுக் குறிப்போடு அனைவர்க்கும் அருளோடு வழங்கும் நுண்மாண் நுழைபுலத்திலும் வல்ல சேக்கிழாரடிகள், குழந்தையின் இந் நலங்களெல்லாம் நன்கு தோன்ற,

---

"வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்"

என்று அருளிச் செய்தார்.

இயல்பாகவே புனிதவதியாராதலின் 'புனிதவதியார் பிறந்தார்' என்றார்.

திருமடந்தையன்ன செல்வச் செழுமையரேனும் அச் செருக்குச் சிறிதுமின்றிக் குணப்பெருக்கே குறிக்கோளாக உடையவராதலின், 'திருமடந்தை அவதரித்தாள் என வந்து புனிதவதியார் பிறந்தார்' என்றார். திருமகளைப் போலச் செல்வாக்கான குழந்தை வேண்டும் என்று சுற்றத்தார் விரும்புவது இயல்பு. ஆனால் குழந்தை திருமடந்தையின் தோற்றமன்று; புனிதவதி என்னும் உமைப் பிராட்டியின் தோற்றம். பார்ப்பவர்களுக்கு ஒரு செல்வக் குழந்தை பிறந்தது போலத் தோற்றும். ஆனால், உண்மையிற் பிறந்ததோ ஒரு குணக் குழந்தை! ஆதலால், திருமடந்தை அவதரித்தாள் என வந்து புனிதவதியார் பிறந்தார்!

அழகு பேரழகாதல் இயல்பு; பேரழகும் மிகுதல் என்றால், அது எத்தகைய வளர்ச்சியைக் குறிக்கின்றது என்று ஓர் ஆவலை எழுப்பக்கூடும். அதனை அறிந்து கொள்ளும்படி, நம் அறிவு நம்மைத் தூண்டுகின்றது. 'பொங்கிய பேரழகு' என்றது, உள்ளத்திற் பொங்கிய பெரிய அழகாகிய கலையழகை. குணநலத்தால் கலையழகும் மாட்சிமைப்படுதலின், 'பேரழகு மிக' என்றார். 'பேரழகும் மிக' என உயர்வு சிறப்பும்மை மறைந்து நின்று இங்ஙனம் பொருள் புலப்படும்படி தொடர் அமைந்த திறம் பெரிதும் இன்பந் தருகின்

மரகத துங்கவெற்றி விகட நடங்கொள் சித்ர
மயிலினில் வந்து முத்தி தரவேணும்

றது. "நவில்தொறும் நூல் நயம்" என்பது இது. இவ்வாறு புனிதவதியார் பிறந்தார்.

மொழி பயின்று :

குழந்தைகள் பிறந்தால், அவைகளைச் செழுமையாக வளர்ப்பதும், பாடசாலைக்கு அனுப்பிக் கல்வி கற்றுக் கொடுப்பதும் உலகத்தில் இயல்பு குழந்தைகள், சிறப்பாக ஆசிரியரிடம் மொழிபயிலும். பின்பு, உரிய பருவத்தில் மக்களில் ஒருவர்பால் காதல் சிறந்து திருமணம் செய்துகொள்வர். வாழ்க்கை சில காலம் நடைபெறும். பின்னர் ஒருவாறு மறையும். குண நலம் ஓரளவு அதனால் கைவரும்.

ஆனால், பிறக்கும்போதே புனிதவதியாராய்ப் பிறந்தவருக்கு ஆசிரியரிடம் மொழி பயில்வதென்பது ஏது? இயல்பாகவே அவர் உள்ளத்தில் ததும்பும் இறையுணர்வு என்னும் மெய்யுணர்வுக் காதலுக்கான மொழிகளே அவர் திருவாய்மலரிலும் மழலையாகவும் மறைகளாகவும் பயின்று வரும். புனிதவதியார், இவ்வாறுதான் காதல் ததும்பவரு மொழி பயின்றார். ஆசிரியர் இம் மொழிப் பயில்வை,

> "வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
> அணிகிளர்மெல் வடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
> பணியணிவார் கழற்கு அடிமை பழகிவரும் பாங்குபெறத்
> தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றார்.

என்று அழகாக எடுத்துக் காட்டினார்.

"வளர்மதியம் புனைந்த சடை அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று" என்றும் மேலும் விளக்குவர்.

இக்கடதனை நீக்கி அக்கடத்தினாக்கி
இப்படிக்கு மோக்ஷம் — அருள்வாசிய

காதல் சிறந்து :

புனிதவதியார் அழகின் கொழுந்து எழுவதென வளர்கின்றார். அவர் விளையாடல் எல்லாம் சிவபிரானுடைய திருவிளையாடல்களின் குறிப்புள்ளனவாய் இருக்கும் சிவபிரான் கட்டளைப்படி விளையாடுவது போல இருக்கும். இறைவனது திருமறை மொழிக்குப் பொருந்தினவாய் இருக்கும். அதுமட்டுமன்று, திருத்தொண்டர்கள் வந்தால், தம் விளையாட்டை விடுத்து அவர்களைத் தொழுது நிற்பார். இங்ஙனந் தெய்வக் காதல் சிறந்து பருவமெய்தினர்.

அசையு நடைப் பருவத்தே அரும்பிய இத் தெய்வக் காதல், பிற பருவங்களிலெல்லாம் போதாகி, மங்கைப் பருவம் அடைந்த இந் நிலையில் நன்கு மலர்ந்து நின்றது.

சேவடியே சேர்ந்தேன் :

சுற்றத்தார் வேறு நினைந்தனர். நாகபட்டினத்தின் வணிகர் குலச் செல்வனான நிதிபதி என்பவன், தன் மகனான பரமதத்தன் என்பவனுக்கு இந் நங்கையாரைத் திருமணம் புரிவிக்க விரும்பினான். தனதத்தரும் இசைபவே, திருமணம் அவர்தம் செழுமைக்குத் தக்கபடி, இனிது நிகழ்ந்தது.

சேக்கிழார், இம் மணமக்களின் இயல்புகளைச் சற்று எண்ணிப் பார்க்கின்றார். நம்மையும் எண்ணிப் பார்க்க வைக்கின்றார்.

மணமகனும் அவன் தந்தைக்கு ஒரே மகன். மணமகளாரும் அவர் தந்தைக்கு ஒரே மகளார். இவ்வகையில் ஒற்றுமைதான்.

எனது நினைந்து கழல பெற மனை
வெல்லு குறிப்பது ஒன்று   புகல்வாயே

மணமகளைப் பற்றி வேறு சிறப்பு ஒன்றும் ஆசிரியர் கூறவில்லை. உடல் அழகேனும் உடையவளோ என்பதும் தெரியவில்லை. "இணர் அலங்கல் மைந்தனையும் மணவணியின் எழில் விளக்கி" என்று அவர் கூறுவதை நோக்கினால், திருமணப் புனைவுகளால் அவன் பொலிவுறத் தோன்றினான் என்பது தெரிகின்றது.

ஆனால், அவன் தீயவன் அல்லன். உழைத்துப் பொருளீட்டி வாழும் முயற்சி மிக்கவன். உயர்ந்த கருத்துக்களிலும் திருநெறியிலும் ஈடுபாடு பெரிதும் இல்லாதவன்; புனிதவதியாருக்கு ஏற்ற உயர்ந்த மனிதன் அல்லன்.

மணமகளாரோ, உலகியல் முறைப்படி மனையறம் புரிதலில் வல்லவரேனும், அதனினும் உயர்ந்து, இறைவன் திருவடிக் காதல் மிகப் பெருகிய பண்பினர்.

மணமகன் இயல்பை ஆசிரியர்,

"நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதல் மேவினான்."

என்று கூறிப் பின்பு மணமகளார் இயல்பை,

"ஆங்கவன்றன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்"

என்று அருளிச் செய்வதிலிருந்து இவ்வுண்மைகள் புலப்படுகின்றன.

கணவன் நிலை வேறு, அவன் துணைவியாரின் நிலை வேறு. மற்றப்படி தீமையாவது யாதுமில்லை.

உமைதரு செல்வன் என மிகு கல்வி
உணர்வொடு சொல்ல

ஆனால், திருமணத்திற்கோ ஒத்த நிலை வேண்டும். வேறு வேறு இனமாக இருத்தலாகாது.

மயில், மிகவும் மென்மையும் நடனமும் அழகும் வாய்ந்த பறவையினம். காளைமாடு, மிகவும் வலிமையும் பெருமித நடையும் ஆண்மையும் வாய்ந்த விலங்கின் இனம். இரண்டும் இணைந்து வாழ்தல் அருமை. இரண்டும் அதனதன் இயல்பில்தகுந்தனவேயாயினும், வாழ்க்கைப் பொருத்தத்திற்கு ஏற்றன அல்ல, மயிலுக்கும் காளைக்கும் எவரேனும் மணங்கூட்டி வைப்பார் உண்டோ?

ஆனால் தனதத்தனும் நிதிபதியும் இவ்வாறு ஒவ்வாத திருமணத்தைப் புரிந்துவிட்டார்கள் என்று சேக்கிழார் பெருமான் சுட்டாமற் சுட்டி, அப் பெற்றோர் உறவினர் செய்கையை இடித்துக் காட்டுகின்றார்.

“ அளிமிடைதார்த் தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்
தளிர்அடி மென் நகை மயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம் செய்தார்கள். ”

என்பதனால் அவர் கருத்து இனிது தெரிகின்றது.

ஆயினும், புனிதவதியார், தாம் இறைவனையே சேர்ந்ததாகப் தம் பெருமையினால் எண்ணித் தம் நிலை வழுவாமல் மகிழ்வோடு மனையறம் நடத்தி வருவாராயினர். இதனையே பின்பு, தாம், ‘அற்புதத் திருவந்தாதி’ அருளிச் செய்ய நேர்ந்த காலத்தில் முதல் திருப்பாட்டிலேயே,

“ பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்”

என்று அழகாக எடுத்திசைக்கின்றார்.

அழுமடியார் முன் - மூதறவேன் கண்
தனு மென வோதும் விறல் தாரால்

அம்மையார் திருவாய்மலர்ந்த இந்த அழகான திருமொழிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் ஆசிரியர் சேக்கிழாரும்,

"பொங்கியபே ரழகு மிகப் புனிதவதி யார் பிறந்தார்"
"தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழி பயின்றார்"
"பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருக"

என அவர்தம் வரலாற்றை இனிதாக இயற்றிச் செல்கின்றார். சேக்கிழாரடிகளின் காப்பியப் பெருமைக்கு இணை ஏது!

ஔவைபிராட்டியார்

(ஸ்ரீ வத்ஸன்)

அவக்கடலை அறவே ஒழித்தவளாம்
உவக்கடலை ஊழியைக் கடந்தவளாம்
தவக்கடலை ஈசனை உணர்ந்தவளாம்
கலைக்கடலாம் ஞானியாம் ஔவையைப்
[போற்றுவோமே.

பள்ளிச் சிறுவர் முதல் விருத்தர்வரை நம் நாட்டில் ஔவைப் பிராட்டியின் பெயரைக் கேட்டிராதவர் இரார். ஏன்? நமது பிராட்டியார் செய்துள்ள அறிவுச் சொற்கள் (பாக்கள்) பாலர் முதல் வயோதிகர்வரை யாவருக்கும் பொருத்தமாகவும், சிறு சொற்களில் ஆழ்ந்த கருத்துக்களை தெரிவிப்பது பற்றியே போலும். இனி எளிய நடையில் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில் சீரிய அறிவை பாமர மக்கட்கும் - ஏன் ஞானி

கட்கும் கூட புகட்டுவதில் நமது ஔவைபிராட்டியார் எவருக்கும் இரண்டாவதல்லர் என்று தயங்கா துரைக்கலாமன்றோ !

அவரவர்கள் கற்ற, கேட்ட, நூல்களுக்குத் தக்கவாறு அறிவு ஏற்படும் என்றும், அந்த அறிவு வளர்ச்சிக்கு உகந்தவாறு, பொருள் ஏற்படும் என்பதற்கு ஏற்றவாறே தாம் பாடியுள்ள பாட்டுகளின் பொருள்களும் விளங்கக் காணவேண்டும் என்பதை உணர்த்தவே இவர்,

"நூலளவேயாகும் நுண்ணறிவு"

எனக் கூறியிருக்கிறார் போலும். தவிர,

"மனைக்குள் வைத்த பாண்டங்களை மறந்தவன்
வருடநூறழுதாலும், நினைத்துணர்ந்த
பின் கிட்டும்........." கைவல்லியம்

அதாவது ஒருவர் தமது கையிலுள்ள சாவிக்கொத்தையோ, பேனாவையோ, எங்காவது மறந்து வைத்துவிட்டு, எங்கெங்கும் அவசர அவசரமாகத் தேடின் கிட்டுவதில்லை. பின், சற்று நிதானித்து, எங்கு சென்றோம், என்ன எழுதினோம், எங்கு எழுதினோம் என்பதாக விசாரித்துச் சிந்தித்துப் பிறகு தேடும்போது அந்த வஸ்து கிடைப்பது இயற்கை இதையே கைவல்லியக்காரர் சொல்லுகிறார். அவ்வாறே நமது பிராட்டியாரும் தாம் பாடிய பாக்களுக்கு, நிதானித்து, தீர்க்க விசாரணைசெய்து, மற்ற நூல்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து, அவரவர்கள் அறிவுக் கேற்றவாறு பொருள் கொள்ளட்டும் என்று கருதியே, மிக மிக எளிய நடையில் பாடியிருக்கிறார் போலும் ! என்னே இவர் பெருமை ! மேலும்,

நன்றான சாத்திரத்தை, தாறுமாறாய்,
நலமுடனே பாராமல், கெட்டலைந்து;
புன்கவிக ளொன்றிருக்க.. ஒன்றைப்

படியிசை போவென றோட்டி அடிமையை நீ வந்தேத்தி
பாகதி தானுங் காட்டி. அருள்வாயே

பார்த்து புராணத்தின் பொருளறியார்
மட்டி மாண்பர் — வன்கொடுமை
செய்பவரோடுசென்று, வாதாடிப்
பலகாலும் வார்த்தைபேசி. தென்
பொதிகை தனிலிருக்கும் சித்தர்நூலைத்
தெளிவாகப் பாராத மட்டிமாடே."

(போகர் - 7000)

இவர்கள் கூறுவதிலிருந்து, முயற்சியுடனும் ஆராய்ச்சியுடனும் பாக்களின் கருத்துக்களை அறியவேண்டும் என்றும் மேலெழுந்த வாரியாக அர்த்தத்தைக் கவனிப்பது போதாது என்பதும் விளங்குகிறதன்றோ. இக் கருத்துக்கு உவமை கூறுவதுபோல,

"கொள்ளாத பசுவுக்கு பாலங்கேது
குருடான கண்ணுக்கு வெளிச்சமேது
சொல்லாத பேச்சுக்குக் கேள்வியேது
சோரஞ்செய் மங்கையர்க்கு வாழ்க்கையேது
கல்லாத வீணருக்கு கல்வியேது......
காணாத பேர்கட்கு காட்சியேது......"

(சுப்பிரமணியர் ஞானம்)

என்று தெள்ளெனப் புரியும்படி சித்தர் நூல்களில் காணப்படுகிறது.

இத்தகைய நமது ஔவைப்பிராட்டியார், பரந்த ஞானிகள் சித்தர்களைப் போல், தாமும் தமது வாழ்நாட்களைப்பற்றியும் தாம் சாதித்துள்ளவைகளைப் பற்றியும் எதுவும் கூறவில்லை.

"ஆடாதே நீபடித்த வித்தையெல்லாம்
அப்பனே பணம்பறிக்கப் படித்தாற்போல
நாடாதே, செத்தோரை மயக்கிடாதே
ஞானியென்று சகந்தனில் அலைந்திடாதே..."

(சுப்பிரம - ஞானம்)

குலவு தோகை மீதாறு முகமும வேலும் ஈராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே

எள்ளுக்கு எண்ணெ போலும்
வித்தினிடத் தடங்கிய மரம்போலும்
காணுகின்ற பூவிலுள்ள வாசம்போலும்
கன்றுவின் பாலிலுள்ள நெய்போலும்......
[இப்பார் பாரே.
(கரூரார் சூட்ம கல்வியறிவு)

என்றபடி தம்மைப்பற்றி இன்னார் என்றுவது, தமது பெருமை சக்தி சாதனை இன்ன என்றுவது வெளிப்படையாகச் சொல்வது ஞானிகளின் போக்கல்ல போலும். இருப்பினும் அம் மகான்கள் பாடியுள்ள பாக்களிலிருந்து ஒருவாறு அவர்களின் வாழ்க்கையைப்பற்றி ஊகித்துத் தான் சொல்ல முடிகிறது.

இந்த நிலையில் நமது ஔவைப் பிராட்டியின் சீவியத்தைப்பற்றி எதுவும் திட்டமாகக் கூற முடியவில்லை. இக்காலத்திய ஆராய்ச்சியாளர்கள் ஏதாமொருவரின் சீவியத்தின் வரலாற்றைத் துருவிப் பார்த்து, தக்க சான்றுகளுடன் கூறுவதாகவும் சொல்லி கடைசியில், தாம் ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்ட அப் பெயருள்ளவர் ஒருவரல்லர், இருவர், மூவர் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அஃதேபோல ஔவை யென்ற பெயருடன் ஓர் மாது அல்ல, இரு மாதுகள் கவிகளாக இருந்தனர் என்றும் சொல்லுகிறார்கள். ஒரு ஔவையின வாழ்க்கையைப் பற்றியே வரலாறுகள் பூராவும் கிடைக்காத நிலையில் மற்றைய ஔவையைப்பற்றி எவ்வாறு கூறுவது. இரண்டு ஔவைகள் இருந்தனர் என்று கூறுபவர், அவ்விருவர்களும் இளம் வாழ்க்கையை நடத்தினரா, இருவர் பாடியுள்ள கவிகள் யாவை. அல்லது ஒருவர் கவிதை, மற்றவர் சாதாரண பெண்மணியா என்பதும் கூறவில்லை. தவிர இருவருக்கும் ஔவை யென்ற பெயர் எப்படி வந்தது இடுபெயரா, காரணப் பெயரா என்பதும் தெரிவிக்கவில்லை. மற்றும் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் மூதுரை, நல்வழி, ஞானக்குறள் இவைகளை யெல்லாம் பாடியவர் ஒருவரேதான் என்பதை இதுவரை

புகழான பூம்பிசை மயவா ம்ருதவகை
பொலிவான பாதமலர் — அருள்வாயே

எவரும் மறுத்ததாகத் தெரியவில்லை. எது எவ்வாறுயி லும், இங்கு யாம் போற்றுவது மேலே கூறிய பொன் மொழிகளைப் பாடிய மாது எவரோ, அம் மாதை. அந்த பழுத்த ஞானி ஒளவைப் பிராட்டியாரையே யாம்.

இனி இந்த பிராட்டியாருக்கு ஒளவை யென்ற பெயர் தான் எப்படி வந்தது, இவரது பெற்ருேரால் இடப் பட்டதா, அல்லது

"வாடென்றும் காடென்றும் பாரார்,
நன்றென்றும் தீதென்றும் சொல்லார்
சாட்சி நடுவான சீவன் முத்தர்"

(கைவல்லியம்)

என்றபடி. ஞானிக்குப் பேர் என்ன ஊர் என்ன என்று எண்ணிப் புனைப் பெயர் கொண்டனரோ, அல்லது இவர் தமது இளம்பிராயத்தில் தம் இல்லத்திலேயே வாழ்ந்து வந்து, வயோதிகமான பின்பு பாமர மக்களிடை சுற்றுப் பிரயாணம் செய்து, அவர்களுடன் தொடர்ந்து பழகிவந்த போது அப் பாமர மக்களால் அன்புடன் அழைக்கப் பட்ட பெயரோ? யாம் அறிய இயலவில்லை. ஆனல், "காவலானே பாவையற் கழகு" என்று போதித்துள்ள இவர், தமது இளம் பிராயத்தில் யாத்திரையைத் தனிமையில் செய்திருக்க மாட்டார் என்று ஊகிக்கலாம். வயோதிகம் ஏற்பட்டபின், அதாவது, தாம் பெண்பா லாகையால், தமது கற்பிற்கு யாரும் இழுக்குக் கூற இயலாத அப்பருவம் வந்தபின்னரே இவர் மக்களிடை பிரயாணம் செய்து இவ்வறிய உண்மை நூல்களைப் போதித்திருக்கிருர் என்றும் கூற இடம் தருகிறது.

"ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை - நமனு மங்கில்லை,
இடும்பையு மில்லை - இராப் பகல் இல்லை,
படும் பயம் இல்லை - பற்று விட்டோர்க்கே.

என்ற திருமூலஸ்வாமி வாக்குப்படி, ஒளவைப் பிராட்டி யாரும், தமது இளம் பிராயத்திலேயே தமது தவப் பயனின் பலனுக, அவச்செயல்களை ஒழித்து, உள்ளத்தில்

நான் அறிந்து தினமுமே நினையவே திருவை
நாடியருளேயருள
வருவாயே

உத்தமனை நினைத்து, உணர்ந்து, உலக வாழ்க்கையின் எல்லையைக் கண்டு. அதை வெறுத்து, "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற ஸ்ரீ அப்பர் வாக்குப்படி பயமற்றவ ராகி, பாமர மக்களிடை கலந்து தமது வாழ்க்கையை நடத்தினார் என்று தோன்றுகிறது. மேலும் முதிர்ந்த அறிவு வளர வளர, அவரும் இனி,

"நாடு நகரமும், நற்றிருக் கோயிலும், தேடித்
திரிந்து சிவபெருமான் என்று பாடுமின்,
பாடிப் பணிமின், பணிந்தபின், கூடிய
நெஞ்சத்துக் கோயிலாயக் கொள்வனே"

(திருமூலர்)

என்றபடி, தல யாத்திரை, ஈசுவர தரிசனம், ஞான நூல்கள் பாடல், போதித்தல் என்பதையே தமது பணியாகக் கொண்டு வாழ்ந்துவந்தார் என்று தோன்றுகிறது.

ஞான பரிபாகம் ஏற்பட்ட பின்பு, ஒருவர், தமக்கு இல்லம் தேவையில்லை, மாடு மக்கள் பெண்டிர் தேவையில்லை, பின் என் செய்வது, அத்தனைப் பற்றிய பிரசாரத்திலும் வழிபாட்டிலும் ஈடுபட்டு, அவருள்ள இடங்களைத் தரிசித்தல், பணிதல், பாடல் இவைகளே முறை என்ற வகையில் நமது சமய குரவர்களும் வாழ்க்கையை நடத்திவந்திருப்பதைப் பார்க்கும்போது, அவ் வழியையே கடைப்பிடித்த நமது ஔவைப்பிராட்டியும் ஞானப்பால் குடித்தவராய்த் தாமும் அத் துறையிலேயே சென்றிருப்பதில் என்ன ஆச்சரியம். ஞானம் வந்தபின்பு நடுக்கம் இல்லை, நமனும் இல்லை. பின் இவர் போன்ற ஞானிகளே யன்றி வேறு எவர் இவருக்கு நிகர் ஆவர்.

(தொடரும்)

சாம வேதியர் வானவர் ஓதி நான்மறை தூவிய
தாளிழ் வீழ விளம்பிக அருள்வாயே.

Printed by T. Ivaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1, Phone No. 55044.
[illegible]

சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டம்

இத் திருக்கூட்டம் செவ்வனே நடந்தேறியது. 28-29-30 பாடல்கள் அனுபூதியிலிருந்து விளக்கப்பட்டன. அகம் அல்லது நான் எனும் உணர்ச்சி ஒரு பிரமம். அதை விழுங்கிவிட்டால் தானுய் நிற்கும் தற்பரம் வெளிப்படுமென்றும், அகம் அதாவது நானற்ற மரம் நாகமரமென்றும், நாகமரத்தில் நாகப் பழமாய் ஔவையாருக்குத் தரிசனம் முருகன் கொடுத்தாரென்றும், ஞானம் முதிர்ந்த தத்துவமாதலால் கிழமென்றும், ஔவையார் கிழவியாய் உபதேசித்தாரென்றும், மோனம் ஞானவரம்பாதலால் முருகன் இளமையென்றும், மாயையில் வசிப்பது பாழ் என்றும், பாழைப் பாழ் செய்து சிறு வாழ்வைப் பெருவாழ்வாக்கவே முருகனை வாழ்த்துவன் என்று அருணகிரி பாடியுள்ளார் என்றும் விரிவாக உபந்யாசங்கள் திருப்புகழ் மணி இயற்றினர்கள். அஞ்ஞான இளமை முற்றி மூப்பு அடைகின்றோம். ஞானம் ஆகும் கிழமை முற்றிப் பெற்றது முருகன் இளமை என்றும் கூறினர்கள்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

தமிழில் ஸ்ரீ வால்மீகி மகரிஷி ப்ரணீத

சுந்தரகாண்டம் (பாராயணத்திற்குரியது)

விலை ரூபா 2—4—0

ஸ்ரீ நாராயணதீர்த்தஸ்வாமிகள் அருளிய

கிருஷ்ணலீலாதரங்கிணி விலை ரூபா 1-8-0.

T. S. நாகராஜ பாகவதர் அவர்களால் தொகுக்கப்பட்ட

பஜனோத்ஸவ பத்ததி அணா 12.

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17. வெங்கடாசல செட்டி தெரு

திருவல்லிக்கேணி, மதராஸ் 5

Regd. No. M. 5390

108

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை, நஞ்சன்கூடு'
குடும்ப அவசியங்கள்

காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை

கர்ஜன்
கோரோஜனை மாத்திரை

பாலக்ஸ்
பேதியாக மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

கூந்தல் செழிப்புக்கு
காஷ்மீர்-குஸும்
நீங்களே தைலம் செய்ய
சிக்கனம் சுலபம்

நறுமண சந்தனக்களிம்பு
ஸான்டலக்ஸ்
சொறி, தீப்புண், காயம், பரு
சரும வியாதிக்கு

உயர்தர மைசூர்
பிரேமலீலா
ஊது வத்திகள்

சுத்தமான
யூனிகான்
தேன்

B.V. Pandit's "SADVAIDYASALA" NANJANGUD
NANJANGUD TOOTH-POWDER
I.D.L. MEDICATED FOR PYORRHOEA
JVARAGUE
FOR CHILL, COLD & FEVERS
BALAXX
CHILDREN'S PURGATIVE PILLS
SOLE AGENTS: UNITED CONCERN, 54, BUNDER ST., MADRAS

"நஞ்சன்கூடு பல்பொடி"
UC I.D.L. 78 Koolex TRADE MARK
கூலெக்ஸ்
குடும்பத்திற்கு அவசியமானவை
காஸ்மஸ் கர்ஜன் பாலக்ஸ்

பல வர்ணப்படங்கள் : ஸ்ரீ குமரகுருபரன், ஸ்ரீ அருணகிரிநாதர்.

புத்தகங்கள் : திருப்புகழ்மாலை அணா 8. அருளிச் செயல் அணா 2½.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை—1

மதுரை : 42, தெற்காவணி. குடந்தை : 37, பாலுசெட்டி தெரு.